**OS.No.1/2014 D.W.1-தன்ராஜ் 12.09.2025**

<u>5 முதல் 7வது பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் சீனிவாச பெருமாள் கோவிலில் வேலை செய்கிறேன். வாதி கோவிலுக்கும், எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். நான் தற்போது குடியிருக்கும் சொத்தில் ஏற்கனவே என் தகப்பனார் பக்தன் குடியிருந்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் பக்தன் இறந்துபோன 1ம் பிரதிவாதியிடம் தாவா சொத்தை வாடகைக்கு எடுத்து குடியிருந்தார் என்றால் சரிதான். மேற்கோப்பு கட்டிடமானது 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்ற விவரம் என் தகப்பனாருக்கு தெரியும் என்றால் அவருக்கு தெரியாது. என் தகப்பனாருக்கு 1ம் பிரதிவாதி தான் தாவா சொத்திலுள்ள மேற்கோப்பு கட்டிடத்திற்கு உரிமையாளர் என்ற விவரம் நன்கு தெரியும் என்றும், அதனை மறைத்து பொய்யாக இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு தாவா காலி மனையானது 99 வருட குத்தகைக்கு வாதி கோவிலில் இருந்த முந்தய வாடகைதாரர் ராஜம் என்பவர் பதிவு குத்தகை பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து ஏற்கனவே ஆலந்தூர் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அந்த வழக்கானது தற்போது பல்லாவரம் உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு நிலுவையில் இருக்கும் விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கானது தாவா சொத்திலுள்ள மேற்கோப்பு கட்டிடம் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் தாவா சொத்தானது வாதி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி என் தகப்பனார் மீது ஆலந்தூர் வாடகை கட்டுப்பாட்டு தீர்ப்பாயத்தின் முன்பு RCOP.No.3/2008-ல் ஒரு வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கில் என் தகப்பனாரை சொத்தை விட்டு காலி செய்ய உத்தரவு ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கானது 03.07.2012-ல் என் தகப்பனாருக்கு எதிராக உத்தரவாகியுள்ளது என்றால் அந்த விவரம் 2013ல் தான் தெரியும். அந்த உத்தரவின் பேரில் நிறைவேற்றுதல் மனு எண்.176/2012 தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவிற்கு எதிராக என் தகப்பனார் ஒரு மேல்முறையீட்டை தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள

எதிர் வழக்குரை பத்தி 5ல் நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு தாக்கல் செய்துள்ள இடைக்கால மனுவில் நான் ஆட்சேபனை தடை மனு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி தடை மனு தாக்கல் செய்த விவரத்தை எதிர் வழக்குரையில் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தின் உரிமையாளர் இல்லை என்று கூறியுள்ளேன் என்றால் கோவில் இடம் என்று கூறியுள்ளேன். காலி இடம் கோவிலுக்கு சொந்தமானது என்றும், அதில் உள்ள மேற்கோப்பு கட்டிடம் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் நிரந்தரமான வாடகைதாரராக வாதி கோவிலுக்கு கீழ் இருந்து வருகிறார் என்றும், அந்த உண்மையை மறைத்து அவரை ஒரு ஆக்கிரமிப்பாளர் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

**(5 முதல் 7வது பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**